[19th March 1963

தனியார் துறை பஸ்கள்

*294 கேள்வி.—திரு. ஆ. துரை அரசன்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-ல் தனியார் துறையில் ஓடுகின்ற பஸ்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) 1962 ஜனவரி மாதம் முதல் அக்டோபர் முடிய அரசினருக்கு வரியாகக் கிடைத்த தொகை எவ்வளவு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) 3,847 route buses and 928 spare buses.

(b) Rs. 698 lakhs roundly.

திரு. மு. கருணாநிதி: இந்த பஸ்களில் எத்தனை தனியார் துறையினருக்கு சொந்தமானவை என்பதைக் கூற முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: தனியார் துறையில் ஓடுகின்ற பஸ்களின் எண்ணிக்கையைப்பற்றித்தான் கேள்வி கேட்கப் பட்டிருக்கிறது. மற்ற விவரம் என்னிடம் இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன்: ஸார், தனியார் துறையில் ஓடுகின்ற பஸ்களின் எண்ணிக்கையைக் குறைக்க அரசாங்கத்திற்கு ஏதாவது உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஏற்கெனவே இதைப்பற்றி பதில் சொல்லி இருக்கிறேன். அப்படிப்பட்ட உத்தேசம் ஒன்றும் இல்லை.

Stage Carriages, Ramanathapuram (Tax Collection)

*295 Q.—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR: Will the Hon. the Chief Minister be pleased to state the circumstances under which the tax payable in respect of stage carriages in Ramanathapuram district for the quarter commencing from 1st January 1963 was notified to be paid on or before 28th February 1963, as per G.O. Ms. No. 317, Home, dated 28th January 1963?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Due to continuous rains, the roads in the District became damage and consequently there were interruptions in the scheduled services resulting in poor collections. To minimise hardship to operators, extension of grace time was allowed.

திரு. சா. ராமசாமி: தனியார் நடத்தும் பஸ்களுக்கு சினிமா டிக்கட்டை அரசாங்க முத்திரையிட்டு தருவதுபோல, டிக்கட் கொடுக்கப்படுவதற்கு அரசாங்கம் ஏதாவது உத்தரவு பிறப்பித்திருக்கிறார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்தக்கேள்வி முதல் கேள்வியிலிருந்து எழவில்லை. வேறு தனி கேள்வி போட வேண்டும்.